**TNVR020007942018**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.

**முன்னிலை – செல்வி.தி.சுபாஷினி., B.Com., L.L.B (Hons)., L.L.M.,**

நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.

2026-ஆம் ஆண்டு ஜீன் மாதம் 24-ஆம் நாள் புதன்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.71/2018**

| | | | |
|---|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | | அரசுக்காக:–<br>காவல் ஆய்வாளர்,<br>திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையம்,<br>குற்ற எண்.232/2017 | |
| குற்றம்சாட்டப்பட்டவரின் பெயர் | | பாலு,<br>த/பெ.முத்தையா,<br>அயன்நத்தம்பட்டி,<br>திருவில்லிபுத்தூர். | |
| சம்பவம் நடந்த நாள் | | 28.03.2017 | |
| புகார் கொடுக்கப்பட்ட நாள் | | 29.03.2017 | |
| எதிரி | | கைதான நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | 18.04.2017 | 18.04.2017 அன்றே காவல் நிலைய பிணையில் சென்றுள்ளார். |
| அரசு தரப்பு விசாரணை முடிவுற்ற நாள்<br><br>எதிரி தரப்பு விசாரணை முடிவுற்ற நாள் | –<br><br>– | 04.06.2026<br><br>இல்லை | |
| எதிரி மீது குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | – | 29.01.2019 | |
| **குற்றம்** | | | |

| | | |
|---|---|---|
| 1. சாட்டப்பட்டது | – | எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279, 304(A) இதசவின் கீழ் |
| 2. வனையப்பட்டது | – | எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279, 304(A) இதசவின் கீழ் |
| காலதாமதத்திற்கான காரணம் | – | சாட்சி விசாரணைக்காக தாமதம் |

SUBASHINI T

Digitally signed by SUBASHINI T

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை பற்றிய விவரங்கள் | – | அ.சா.1 22.09.2022, 05.06.2025 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.2 22.11.2023 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.3 22.11.2023 ம் தேதி முதல் விசாரணை குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.4 23.05.2024 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.5 23.05.2024 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.6 23.05.2024 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.7 23.05.2024 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.8 23.05.2024 ம் தேதி முதல் விசாரணை குறுக்கு விசாரணை இல்லை.<br><br>அ.சா.9 14.07.2025 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.10 14.07.2025 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.11 08.10.2025 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.12 24.12.2025 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.13 07.04.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.14 21.05.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.15 04.06.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை. |

| | | |
|---|---|---|
| எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | – | 19.06.2026 |
| எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச. பிரிவு 311 பிரிவின் படியான மனுக்கள் | – | Crmp.No.27/2026 dated. 30.01.2026 |
| அரசு தரப்பு வழக்கறிஞர் | – | திருமதி.P.பெத்துரதி, MBA., B.L., |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | – | திரு.J.பிரபாகரமூர்த்தி, B.A., B.L., |
| எதிரியின் கூற்று | – | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். |
| நீதிமன்றத்தின் முடிவு | – | முடிவாக, இந்த வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவம் குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணம் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கத் தவறி விட்டதாக தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி, எதிரி மீது சுமத்தப்பட்ட இதச சட்டப்பிரிவுகள் 279, 304(A)ன் படியான குற்றத்திற்கு குற்றவாளி இல்லை என முடிவு செய்து குவிமுச பிரிவு 255(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>மேலும் இந்த வழக்கில் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படாததால் சொத்து குறித்து உத்தரவு இல்லை. |

இவ்வழக்கானது 07.06..2018 ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 19.06.2026-ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–1 திருமதி.P.பெத்துரதி, MBA., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.J.பிரபாகரமூர்த்தி, B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்தும், ஆவணங்களை ஆராய்ந்தும், இறுதி

பரிசீலனைக்குப் பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.........

## தீர்ப்புரை

இவ்வழக்கின் புகார்தாரர் கடந்த 28.03.2017 ம் தேதி காலை 11.30 மணிக்க வத்திராயிருப்பில் இருந்துதி ருவில்லிபுத்தூர் செல்வதற்கு TN 67 N 0409 என்ற எண் கொண்ட அரசு பஸ்சை எடுத்து வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்து கொண்டிருக்கும் போது மதுரை ரோட்டில் கீழ்புறம் அமைந்துள்ள மகேந்திரா கம்பெனி அருகே பகல் சுமார் 12.00 மணியளவில் புதிய தார்சாலை அமைத்துக்கொண்டு இருந்த போது வாகனங்களை நிறுத்தி போக்குவரத்திற்கு இடைஞ்சல் இல்லாமல் இருக்க ஒவ்வொரு வாகனமாக போக சொல்லி கொண்டு இருந்த போது புகார்தாரர் அவரது பேருந்தை வலது பக்கம் திருப்பி சைடு மிரரை பார்த்து வாகனத்தை எடுக்கும் போது இந்த வழக்கின் எதிரி TN 67 AQ 4847 என்ற எண் கொண்ட Honda Shine பைக்கை அவருக்கு பின்னால் அவரது அம்மா கூடம்மாளை உட்கார வைத்து அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் சாலை விதிகளை பின்பற்றாமல் ஹாரன் அடிக்காமல் தலையில் ெஹல்மேட் போடாமல் ஓட்டி வந்து புகார்தாரர் ஓட்டி சென்ற பஸ்சை ஓவர் டேக் செய்ய முயற்சி செய்து கட்டுப்பாடின்றி நிலைதடுமாறி பஸ்சின் வலது பக்கத்தில் எதிரி ஓட்டி வந்த இருச்ககர வாகனத்தின் ேஹன்பாரால் இடித்து வாகனத்துடன் வலது பக்கம் கீழே விழுந்து பின்னால் உட்கார்ந்து வந்த கூடம்மாள் தலை மற்றும் கை காலில் காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று சிகிச்சை பலனின்றி இறப்பு ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279, 304(A) இதசவின் கீழ் தண்டிக்கத்தக்கவர் என்று திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலைய ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2)** எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானபோது எதிரிக்கு அரசு தரப்பில் தாக்கலான ஆவணங்களின் நகல்கள் யாவும் குவிமுச பிரிவு 207-ன் படி இலவசமாக வழங்கப்பட்டு, குற்றம் குறித்து வினவியபோது பொய் வழக்கு குற்றவாளி இல்லை

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

என்றார். போதிய கால அவகாசத்திற்கு பிறகு இதச பிரிவு 279, 304(A)-ன் படி குற்றம் குறித்து வினவியபோது, எதிரி பொய்வழக்கு, குற்றவாளி இல்லை என மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**3.** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.15 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும் அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆவணங்களை ஆராய்ந்ததிலிருந்து அ.சா.ஆ.2 ஆக பணி நியமனச் சான்று மற்றும் பார்வை மகஜரில் உள்ள அ.சா.7 ன் கையெழுத்து குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதனால் பணி நியமனச் சான்று அ.சா.ஆ.11 ஆக மாற்றப்பட்டு குறிப்பிடப்படுகிறது. அ.சா.ஆ.3 ஆக முதல் தகவல் அறிக்கை மற்றும் பார்வை மகஜரில் உள்ள அ.சா.8 ன் கையெழுத்து குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதனால் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.12 ஆக மாற்றப்பட்டு குறிப்பிடப்படுகிறது. அ.சா.ஆ.6 ஆக சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை மற்றும் விபத்து பதிவேடு குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.13 ஆக மாற்றப்பட்டு குறிப்பிடப்படுகிறது.

**4) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:-**

**4-(1)**அ.சா.1 திரு.கொத்தாளமுத்து தனது சாட்சியத்தில், தற்போது டிஎன்எஸ்டிசியில் பேருந்து ஓட்டுநராக பணிபுரிந்து வருவதாகவும், 28.3.2017 ம் தேதியன்று TN 67 N 0409 என்ற பதிவெண்கொண்ட அரசு பேருந்தை தான் ஓட்டியதாகவும், மதியம் 12.00 மணியளவில் மதுரை ரோட்டில் பவளம் பேக்கரி அருகில் தார் ரோடு போட்டுக்கொண்டிருந்தார்கள் என்றும், ஒரு நபர் சிவப்பு கொடியை அசைத்து தான் ஓட்டி வந்த பேருந்தை நிறுத்த கேட்டுக் கொண்டதற்கிணங்க தான் தனது பேருந்தை நிறுத்தியதாகவும், பின்பு அந்த நபர் வண்டியை போகச்சொன்னபோது தான் வலது புறம் வாகன கண்ணாடியை பார்த்து பின்பு திரும்பிவிட்டு தான் அந்த இடத்தை விட்டு செல்லும்போது நத்தம்பட்டியை சேர்ந்த முத்தையா தேவர் மகன் பாலு அவருடன் அவரது அம்மாவுடன் TN 67 AQ

4847 என்ற பதிவெண் கொண்ட இரு சக்கரவாகனத்தை அதிவேகமாக தலையில் கவசம் அணியாமல் ஆரன் அடிக்காமல் வலது பக்கம் வந்து தனது பேருந்தில் அவரது இடது இருசக்கர வாகனத்தில் உள்ள ே◌ஹண்டில் பார் உரசி வலது பக்கமாக விழுந்து விட்டார்கள் என்றும், விழுந்ததில் வாகனத்தில் பின்னால் அமர்ந்திருந்த அவரது அம்மாவுக்கு தலையில் காயம்பட்டது என்றும், எதிரி பாலுவை தான் சம்பவயிடத்தில் பார்த்ததாகவும், அதன்பின்பு காயம்பட்ட நபரை 108 ஆம்புலன்ஸ் வந்து திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்றும், மறுநாள் 29.3.2017 ம் தேதி சம்பவத்தைப் பற்றி தான் திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையம் சென்று ஒரு புகார் கொடுத்ததாகவும், புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், புகார் அசாஆ.1 என்றும், மறுநாள் 30.3.2017 அன்று காயம்பட்ட நபர் இறந்து விட்டதாக தனக்கு தகவல் வந்தது என்றும், போலிசார் என்னை இது சம்மந்தமாக விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**4-(2)** அ.சா.2 திரு.சிவனேஷ்வரன் தனது சாட்சியத்தில், தான் தற்போது சொக்கனாமுத்தூரில் குடியிருந்து வருவதாகவும், AKR ரோடுபோடும் கான்ட்ராக்டரிடம் தான் சூப்பர்வைசராக வேலை செய்து வருவதாகவும், தேதி நியாபகம் இல்லை என்றும், 2017 ம் வருடம் மார்ச் மாதம் கிருஷ்ணன்கோவில் அருகே துப்பாக்கி சுடும் தளத்திற்கு எதிரே ரோடு போடும் வேலையில் இருந்ததாகவும், அப்போது அந்த இடத்திற்கு 100 மீட்டருக்கு முன்பு ஒரு விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள் என்றும், தான் போய் பார்க்கவில்லை என்றும், 3 நாட்கள் கழித்து அதே இடத்தில் ரோட்டிற்கு மண் அணைத்துக் கொண்டிருந்ததாகவும், அப்போது 3 போலீசார் வந்து தன்னிடம் விபத்து சம்மந்தமாக கேட்டார்கள் என்றும், தனக்கு தெரியாது என்று சொன்னதாகவும், தனது அட்ரஸ், போன் நம்பர் கேட்டார்கள் என்றும், தான் கொடுத்ததாகவும், அவ்வளவுதான் வேறு எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**4–(3)** அ.சா.3 திரு.சண்முகசுந்தரம் தனது சாட்சியத்தில், தான் தற்போது சொக்கனாமுத்தூரில் குடியிருந்து வருவதாகவும், ரோட்டு ஓரமாக ரோட்டிற்கு மண் அணைக்கும் வேலை செய்து வருவதாகவும், தான் 2017 ம் வருடம் வேலை செய்து

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

கொண்டிருந்தபோது கூட்டமாக பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும், விபத்து நடந்ததாக பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும், தான் பார்க்கவில்லை என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், இந்த வழக்கு பற்றி வேறு எதுவும் தனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**4-(4)** அ.சா.4 திரு.பாண்டியன் தனது சாட்சியத்தில், தான் அரசு பேருந்து நடத்துனராக பணிபுரிந்து வருவதாகவும், அ.சா.1 கொத்தாளமுத்து விபத்துசம்பவத்தின் போது தான் நடத்துனராக பணிபுரிந்த அரசு பேருந்தின் ஓட்டுனர் என்றும், கடந்த 28.03.2017ம் தேதி மதியம் 12.00 மணியளவில் தான் TN 67 N 0409 என்ற எண்கொண்ட அரசு பேருந்தில் நடத்துனராக பணியில் இருந்தபோது மேற்படி பேருந்து கிருஷ்ணன்கோவில்அடுத்து உள்ள VPM கல்லூரி பேருந்து நிறுத்தத்தில் பயணிகளுக்கு பயணச்சீட்டு கொடுத்துக்கொண்டிருந்ததாகவும், அப்போது அந்த பேருந்து பேருந்து நிறுத்தத்தினை தாண்டி வடக்கில் இருந்து தெற்காக வந்துகொண்டிருந்தது என்றும், அந்த இடத்தில் ரோடு வேலை நடந்து கொண்டிருந்தது. திடீரென ஒரு சத்தம் கேட்டது என்றும், பேருந்தில் உள்ள அனைத்து பயணிகளும் பேருந்தினை விட்டு இறங்கினார்கள் என்றும், தானும் பேருந்தில் இருந்து இறங்கி பார்த்தபோது ஒரு இருசக்கர வாகனம் தங்களது பேருந்தில் மோதி இருந்தது என்றும், அந்த இருசக்கர வாகனத்தில் ஒரு பையனும், அவருடைய அம்மாவும் இருந்தார்கள் என்றும், அந்த பையன் யார் என்று தெரியாது என்றும், ஆஜர் எதிரி அந்த பையன் இல்லை என்றும், பேருந்திற்கு விபத்து ஏற்பட்டுவிட்டதால் தான் பேருந்தில் இருந்த பயணிகளை மற்றொரு பேருந்திற்கு மாற்றி அனுப்பி வைத்ததாகவும், பேருந்தின் ஓட்டுனர் கொத்தாளமுத்து விபத்து சம்பவம் பற்றி திருவில்லிபுத்தூர் பேருந்து பணிமனை நிர்வாகத்திற்கு தகவல் தெரிவித்தார் என்றும், கொத்தாளமுத்து விபத்து சம்பவம் பற்றி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**4-(5)** அ.சா.5 திரு.முனியாண்டி தனது சாட்சியத்தில் அ.சா.1யை தனக்கு தெரியும் என்றும், சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதிய நேரத்தில் தான்

ஒரு இடத்திலுள்ள தார் ரோட்டில் ரோடு வேலை பார்த்துக் கொண்டிருந்ததாகவும், அந்த இடம் எந்த இடம் என்று தனக்கு தெரியாது என்றும், அப்போது அந்த இடத்தில் இருந்து 100 மீட்டர் தள்ளி விபத்து நடந்ததாக கேள்விப்பட்டதாகவும், என்ன விபத்து நடந்தது என்று தனக்கு தெரியாது என்றும், மறு நாள் வந்து தன்னை போலீசார் விபத்து நடந்தது சம்பந்தமாக விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**4-(6)** அ.சா.6 திரு.அய்யனார் தனது சாட்சியத்தில் அ.சா.1 யை தெரியும் என்றும், அ.சா.5 ம் தானும் ஒன்றாக தான ரோட்டு வேலை செய்து வருவதாகவும், சுமார் 7 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதிய நேரத்தில் தான் கிருஷ்ணன்கோவில் அடுத்துள்ள சூட்டிங் ரேஞ்சிற்கு அருகே உள்ள ரோட்டில் வேலை பார்த்துக்கொண்டிருந்ததாகவும், அப்போது அந்த இடத்தல் இருந்து 150 மீட்டர் தள்ளி விபத்து நடந்ததாக கேள்விப்பட்டதாகவும், என்ன விபத்து நடந்தது என்று தனக்கு தெரியாது என்றும், மறு நாள் வந்து தன்னை போலீசார் விபத்து நடந்தது சம்பந்தமாக விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**4-(7)** அ.சா.7 திரு.பார்த்திபன் தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து அ.சா.ஆ.2 என்றும், தான் ஒரு நாள் கம்பெனியில் இருந்த போது போலீசார் தன்னிடம் கையெழுத்து கேட்டார்கள் என்றும், போட்டுக்கொடுத்ததாகவும், தான் எதற்காக போட்டுக்கொடுத்தேன் என்று தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**4-(8)** அ.சா.8 திரு.பெருமாள் தனது சாட்சியத்தில், பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.3 என்றும், தான் ஒரு நாள் கம்பெனியில் இருந்த போது போலீசார் தன்னிடம் கையெழுத்து கேட்டார்கள் என்றும், போட்டுக்கொடுத்ததாகவும், தான் எதற்காக போட்டுக்கொடுத்தேன் என்று தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**4-(9)** அ.சா.9 திரு.செந்தில்குமார் தனது சாட்சியத்தில், கடந்த 2017 ம் வருடம் பங்குனி மாதம் ஒரு நாள் தனது பெரியம்மாவான கூடம்மாளுக்கு

அடிபட்டிருந்ததாகவும், திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்திருப்பதாகவும், தங்கள் ஊரில் தன்னிடம் தெரிவித்தார்கள் என்றும், அதன் பின்பு என்ன நடந்தது என்பது பற்றி தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**4-(10)** அ.சா.10 திரு.கணேசன் தனது சாட்சியத்தில், கடந்த 2017ம் வருடம் ஏப்ரல் மாதம் ஒரு நாள் கூடம்மாளுக்கு விபத்து ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதித்திருப்பதாக தகவல் தெரிந்து மருத்துவமனைக்கு தான் சென்று பார்த்ததாகவும், அது தவிர வேறு எதுவும் தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**4-(11)** அ.சா.11 திரு.சத்தியமூர்த்தி தனது சாட்சியத்தில், தான் தற்போது தமிழ்நாடு அரசு போக்குவரத்து கிளையில் பணிபுரிந்து ஓய்வு பெற்று திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருவதாகவும், கடந்த 28.03.2017 ம் தேதி திருவில்லிபுத்தூர் அரசு போக்கு வரத்துக்கழகத்தில் மேற்பார்வையாளராக பணிபுரிந்துவந்தபோது TN 67 N 409 என்ற அரசு பேருந்திற்கு ஓட்டுநராக கொத்தாளமுத்து என்பவரையும், நடத்துனராக பாண்டியன் என்பவரையும் நியமணம் செய்ததாகவும், தான் நியமணம் செய்ததற்கான பணி நியமனச் சான்று தன்னிடம் காட்டப்படுவது தான் என்றும், தான் வழங்கிய பணி நியமண சான்று அ.சா.ஆ.2 என்றும், இது சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரித்தனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**4-(12)** அ.சா.12 திரு.தேவதாஸ் தனது சாட்சியத்தில், தான் தற்போது விருதுநகர் காவல் கட்டுப்பாட்டு அறையில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 28.03.2017ம் தேதி திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் பணிபுரிந்தபோது 12.15 மணியளவில் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலைப் பெற்று வாகன விபத்தில் காயமடைந்து அயன் நத்தம்பட்டியை சேர்ந்த முத்தையா மனைவி கூடம்மாள் என்பவரை விசாரிக்க சென்றபோது அவர் பேசமுடியாத நிலையிலிருந்ததால் மேல்சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துமவனைக்கு அனுப்பி

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

வைக்கப்பட்டதாக கிடைத்த தகவலை பெற்று நிலையம் வந்து பொதுநாட்குறிப்பில் பதிவு செய்து மேல் அதிகாரிகளிடம் தகவல் சொன்னதாகவும், கடந்த 29.03.2017 ம் தேதி 11.00 மணிக்கு நிலையத்திலிருந்தபோது திருவில்லிபுத்தூர் அரசு பேருந்து ஓட்டுநராக பணிபுரியும் மூவரை வென்றான் ஊரைச் சேர்ந்த வேலுச்சாமி மகன் கொத்தாளமுத்து என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.232/2017 பிரிவுகள். 279, 337 இதச ஆக வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலை நீதிமன்றத்திற்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்ததாகவும், முதல் தகவல் அறிக்கை அசாஆ.3 என்றும், இந்த விவரத்தை மேல் அதிகாரிகளிடம் தெரிவித்ததாகவும், பின்னர் வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாகவும், சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**4-(13)** அ.சா.13 திரு.ரமேஷ் தனது சாட்சியத்தில், தான் தற்போது சிவகங்கை மாவட்டம் கள்ளல் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 29.03.2017 அன்று 11.00 மணிக்கு திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய தலைமை காவலர் 558 தேவதாஜ் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது திருவில்லிபுத்தூரைச் சேர்ந்த மூவரைவென்றான் பிள்ளையார் கோவில் தெருவைச் சேர்ந்த வேலுச்சாமி மகன் கொத்தாளமுத்து என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, புகாரின் தன்மைக் கேற்ப நிலைய குற்ற எண்.232/2017 பிரிவுகள் 279, 337 இதசவாக வழக்கு பதிவு செய்து, தன் பார்வைக்கு வைக்கப்பட்ட வழக்கு கோப்பை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் 12.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் பார்த்திபன் மற்றும் பெருமாள் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், பார்வை மகஜர் அசாஆ.4 என்றும், மாதிரி வரைபடம் அசாஆ.5 என்றும், பின்னர் சாட்சிகள் கொத்தாளமுத்து, பாண்டியன், முனியாண்டி, சிவனேஸ்வரன், சண்முகசுந்தரம், அய்யனார், செந்தில்குமார், கணேசன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு

SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

செய்ததாகவும், இவ்வழக்கில் காயம்பட்ட கூடம்மாள் என்பவர் 30.03.2017 அன்று காலை 10.30 மணிக்கு மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்ததால் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவை.279, 304(A) இதக ஆக மாற்றம் செய்து மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாகவும், ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ.6 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**4-(14)** அ.சா.14 திருமதி.சுகன்யாதேவி தனது சாட்சியத்தில், தற்போது இஎஸ்ஐ மருத்துவமனை மதுரையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருவதாகவும், தான் கடந்த 28.03.2017 அன்று திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் பணியிலிருந்தபோது அய்யன் நத்தம்பட்டி 1/28A அக்கிரஹாரம் தெரு முத்தையா மனைவி கூடம்மாள் 55 வயது மதிக்கத்தக்கவர் அவரை அவரது மகன் பாலு என்பவர் அழைத்து வந்தார் என்றும், அவரைபரிசோதித்து பார்த்தபோது அவரின் மகனின் வாக்குமூலத்தின் படி 28.03.2017 அன்று மதியம் 12.00 மணியளவில் திருவில்லிபுத்தூர் Shooting Range அருகில் டுவீலரில் நத்தம்பட்டியிலிருந்து திருவில்லிபுத்தூர் நோக்கி வரும்போது அதே திசையில்வந்த பிஆர்சி பஸ் மோதியதாக கூறியதாகவும், அவரை பரிசோரித்து பார்த்தபோது அவர்சுயநினைவில் இருந்தார் என்றும், அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1) வலது பக்க தலையில் வெட்டுக்காயம் 8*3*2.5 செ.மீ அளவில் Parietal ஏறியாவில் அதே இடத்தில் எலும்பு முறிவும் இருந்தது என்றும், 2) வலது பக்க முகம் வீக்கத்துடன் காணப்பட்டது என்றும், அவருக்கு வலது பக்க கை முட்டியில் பலதரப்பட்ட சிராய்ப்பு காயங்கள் இருந்தன என்றும், அவரைபரிசோதித்தபோது அவருக்கு பிரசர் அதிகமாக இருந்ததால் அதற்கான முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக அரசு ராஜாஜி மருத்துவமனை மதுரைக்கு அனுப்பிவைத்ததாகவும், திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் கூடம்மாளுக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு அசாஆ.6 என்றும், போலீசார் தன்னை விசாரித்தனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**4-(15)** அ.சா.15 திரு.மகேஸ்குமார் தனது சாட்சியத்தில், தான் தற்போது ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 30.03.2017 அன்று திருவில்லிபுத்தூர் நகர் வட்டக்காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய குற்ற எண்232/2017 பிரிவுகள்.279, 337 இதச ஆக பதிவு செய்து வைத்திருந்த முதல் தகவல் அறிக்கையை அதில் பாதிக்கப்பட்ட நபர் இறந்தவுடன் வழக்கு தனது மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனை சென்று இறந்தவர் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை பஞ்சாயத்தார் முன்னிலையில் மேற்கொண்டதாகவும், பிரேத விசாரணை அறிக்கை அசாஆ.7 என்றும், பின்னர் இறந்தவரின் உடலை பிரேத பரிசோதனை செய்வதற்காக காவலரிடம் கடிதம் கொடுத்து அனுப்பியதாகவும், பின்னர் அன்றைய தினமே இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகள் 2 முதல் 9 சாட்சிகளை ஏற்கனவே சார்பு ஆய்வாளர் விசாரித்தவர்களை தான் விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் தகா.தேவதாஸ், சாட்சி சத்தியமூர்த்தி, தகா.ராஜேஷ்கண்ணா ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் 18.04.2017 அன்று மேற்படி விபத்துக்குள்ளான வாகனங்களை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னர் 06.05.2017 அன்று திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் சுகன்யாதேவி, மதுரை மீனாட்சி மிஷின் மருத்துவமனை மருத்துவர் ஜமால் முகமது சாஜி மற்றும் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனை மருத்துவர் காதர் மைதீன், மதுரை மருத்துவக்கல்லூரி மருத்துவர் விஜயபாலாஜி ஆகியோர்களை விசாரித்து மருத்துவ சான்று மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பிரேத பரிசோதனை அறிக்கை அசாஆ.8 என்றும், பின்னர் அன்றைய தினமே மோட்டார் வாகன ஆய்வாளர் கார்த்திகேயன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றதாகவும், TN 67 N 0409 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அசாஆ.9 என்றும், TN 67 AQ 4847 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அசாஆ.10 என்றும், பின்னர் அன்றைய தினமே இவ்வழக்கின் முதல் விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் ரமேஷ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் அன்றை

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

தினமே எனது விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள்.279, 304(A) இதசவின் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**5)** இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டு, எதிரிக்கு எதிராக தோன்றிய அரசு தரப்பு சாட்சிய சங்கதிகளை தொகுத்து எதிரியிடம் குவிமுச பிரிவு 313(1)(ஆ) ன்படி வினவியபோது எதிரி சாட்சியை பொய் எனக் கூறி மறுத்தார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு எனக் கூறினார், சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6) தீர்வுக்குரிய பிரச்சனை :–**

அரசு தரப்பால் எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றம் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

7) இவ்வழக்கின் புகார்தாரர் கடந்த 28.03.2017 ம் தேதி காலை 11.30 மணிக்க வத்திராயிருப்பில் இருந்துதி ருவில்லிபுத்தூர் செல்வதற்கு TN 67 N 0409 என்ற எண் கொண்ட அரசு பஸ்சை எடுத்து வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்து கொண்டிருக்கும் போது மதுரை ரோட்டில் கீழ்புறம் அமைந்துள்ள மகேந்திரா கம்பெனி அருகே பகல் சுமார் 12.00 மணியளவில் புதிய தார்சாலை அதைத்துக்கொண்டு இருந்த போது வாகனங்களை நிறுத்தி போக்குவரத்திற்கு இடைஞ்சல் இல்லாமல் இருக்க ஒவ்வொரு வாகனமாக போக சொல்லி கொண்டு இருந்த போது புகார்தாரர் அவரது பேருந்தை வலது பக்கம் திருப்பி சைடு மிரரை பார்த்து வாகனத்தை எடுக்கும் போது இந்த வழக்கின் எதிரி TN 67 AQ 4847 என்ற எண் கொண்ட Honda Shine பைக்கை அவருக்கு பின்னால் அவரது அம்மா கூடம்மாளை உட்கார வைத்து அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் சாலை விதிகளை பின்பற்றாமல் ஹாரன் அடிக்காமல் தலையில் ெஹல்மேட் போடாமல் ஓட்டி வந்து புகார்தாரர் ஓட்டி சென்ற பஸ்சை ஓவர் டேக் செய்ய முயற்சி செய்து கட்டுப்பாடின்றி நிலைதடுமாறி பஸ்சின் வலது பக்கத்தில் எதிரி ஓட்டி வந்த

இருச்ககர வாகனத்தின் ேஹன்பாரால் இடித்து வாகனத்துடன் வலது பக்கம் கீழே விழுந்து பின்னால் உட்கார்ந்து வந்த கூடம்மாள் தலை மற்றும் கை காலில் காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று சிகிச்சை பலனின்றி இறப்பை ஏற்படுத்தினார் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

8. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது, அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எனவே எதிரியை தண்டிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

9. எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்றும், மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றவாணங்களின் மூலம் எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்றும், அதனால் எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

10. இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், தான் TNSTC–ல் பேருந்து ஓட்டுநராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 28.03.2017 அன்று TN 67 N 0409 என்ற பதிவு எண் கொண்ட அரசு பேருந்தை தான் ஓட்டிக் கொண்டு மதியம் 12.00 மணி அளவில் மதுரை ரோட்டில் உள்ள பவளம் பேக்கரி அருகே சென்று கொண்டிருந்த போது அங்கு தார்ரோடு போட்டுக்கொண்டிருந்ததாகவும், ஒரு நபர் சிவப்பு கொடியை அசைத்து தான் ஓட்டி வந்த பேருந்தை நிறுத்த கேட்டுக்கொண்டதற்கிணங்க தான் தனது பேருந்தை நிறுத்தியதாகவும், பின்னர் அந்த நபர் வண்டியை போகச் சொன்ன போது தனது வலது புற வாகனக் கண்ணாடியை பார்த்து திரும்பிவிட்டு தான் அந்த இடத்தை விட்டு செல்லும் போது, நத்தம்பட்டியைச் சேர்ந்த முத்தைய என்பவரது மகன் பாலு தனது அம்மாவுடன் TN 67 AQ 48 47 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தை அதிவேகமாக தலையில் கவசம் அணியாமல் ஹாரன் அடிக்காமலும் வலது பக்கம் வந்து தனது

பேருந்தில் அவரது இடது இருசக்கர வாகனத்திலுள்ள ேஹண்டில்பார் உரசி வலது பக்கமாக விழுந்துவிட்டதாகவும், விழுந்ததில் வாகனத்தின் பின்னால் அமர்ந்திருந்த அவரது அம்மாவுக்கு தலையில் காயம் ஏற்பட்டதாகவும், எதிரி பாலுவை தான் சம்பவ இடத்தில் பார்த்ததாகவும், அதன் பின்பு காயம்பட்ட நபரை 108 ஆம்புலன்ஸ் வந்து திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும், மறுநாள் 29.03.2017 அன்று சம்பவத்தை பற்றி தான் திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும், அதில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், மறுநாள் 30.03.2017 அன்று மேற்படி காயம்பட்ட நபர்இறந்துவிட்டதாக தனக்கு தகவல் தெரிந்ததாகவும், இவ்வழக்கின் எதிரி தான் தனது புகார் மனுவில் கூறப்பட்டுள்ள பாலு (எ) பாலமுருகன் என்று கூறியுள்ளார்.

11. மேலும் அவரது குறுக்கு விசாரணையில், தனது முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளை தான் போலீசார் விசாரணையிலும் கூறியுள்ளதாகவும், மேற்படி பவளம் பேக்கரியானது துப்பாக்கி சுடும் தளத்திலிருந்து சுமார் 500 மீட்டர் தொலைவில் உள்ளதாகவும், மகேந்திரா கம்பெனியானது துப்பாக்கி சுடும் தளத்திற்கு நேர் எதிர்புறம் உள்ளதாகவும், விபத்து நடந்ததாக கூறப்படும் இடத்தில் ரோடு போடும் வேலை நடந்து கொண்டிருந்ததாகவும், தனது பேருந்திற்கு பின்புறம் பலவண்டிகள் நின்று கொண்டிருந்ததாகவும், தனக்கும் கம்மாபட்டியைச் சேர்ந்த தங்கம் என்பருக்கும் பழக்கம் உள்ளதாகவும், தான் போலீசார் விசாரணையில் ஒரு நபர் வண்டியை போகச் சொன்ன போது தான் வலது புறம் வாகன கண்ணாடியை பார்த்த பின்பு திரும்பிவிட்டு தான் அந்த இடத்தை விட்டு சென்றதாக கூறியுள்ளதாகவும், தனது வாகனம் இயக்கத்தில் இருந்த போது தான் விபத்து ஏற்பட்டதாகவும், தான் வாகனம் நிறுத்தியிருந்த இடத்திற்கு முன்பு சுமார் 7, 8 நபர்கள் ரோடு போடும் வேலையில் ஈடுபட்டிருந்ததாகவும், அந்த நபர்களை விசாரித்தால் அவர்கள் அன்று வேலை செய்தார்களா என்பது தெரியவரும் என்றும், அவ்வாறு ரோடு போடும் வேலை நடைபெற்றிருந்தால், தான் வலது புறமாக சென்றுதான் வாகனத்தை ரோட்டின் இடது புறமாக மாறி செல்லமுடியும் என்றும், சம்பவம் நடந்த சாலையானது மதுரை டூ

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

இராஜபாளையம் ரோடு என்பதால், பொதுவாக அங்கு கனரக வாகனங்கள் அதிகமாக செல்லும் என்றும், தான் வாகனத்தை இயக்கும் பொழுது வாகனத்தில் உள்ள கண்ணாடியை பார்த்து இயக்கியிருந்தால், பின்னால் வந்த வாகனத்தை பார்த்து வண்டியை நிறுத்தியிருப்பேன் என்றும், விபத்து நடந்ததாக கூறப்படும் இடத்திற்கு சுமார் 150 மீட்டர் தூரத்தில் தான் ரோடு போடும் வேலையானது நடைபெற்றது என்றும், தான் விபத்து நடந்த அன்றே புகார் கொடுத்துவிட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.2 தனது சாட்சியத்தில், தான் AKR ரோடு போடும் கான்ட்ராக்டரிடம் சூப்பர்வைசராக வேலை செய்து வருவதாகவும், கடந்த 2017ம் வருடம் மார்ச் மாதம் கிருஷ்ணன்கோவில் அருகே துப்பாக்கி சுடும் தளத்திற்கு எதிரோ ரோடு போடும் வேலையில் இருந்ததாகவும், அப்போது அந்த இடத்திற்கு 100 மீட்டருக்கு முன்பு ஒரு விபத்து நடந்ததாக சொன்னதாகவும், தான் போய் பார்க்கவில்லை என்றும், 3 நாட்கள் கழித்து அதே இடத்தில் ரோட்டிற்கு மண் அனைத்துகொண்டிருந்த போது 3 போலீசார் வந்து தன்னிடம் விபத்து சம்பந்தமாக கேட்டதாகவும், தான் தெரியாது என்று சொல்லிவிட்டதாகவும், தனது தொலைபேசி எண் மற்றும் விபரங்களை போலீசார் கேட்டதால் தான் கொடுத்ததாகவும், வேறு எதுவும் தனக்கு தெரியாத என்றும், இவ்வழக்கின் எதிரியை தனக்கு தெரியாது என்றும், இவ்வழக்கு சம்பவத்தை தான் நேரில் பாக்கவில்லை என்று அரசு தரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

13. இவ்வழக்கின் மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.3 தனது சாட்சியத்தில், தான் ரோட்டிற்கு மண் அனைக்கும் வேலை செய்து வருவதாகவும், கடந்த 2017ம் வருடம் வேலை செய்து கொண்டிருந்த போது கூட்டமாக விபத்து நடந்ததாக பேசிக் கொண்டிருந்ததாகவும், தான் அதனை பார்க்கவில்லை என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை

என்றும், இவ்வழக்கின் எதிரியை தனக்கு தெரியாது என்றும், இவ்வழக்கின் விபத்தினை தான் நேரடியாக பார்க்கவில்லை என்று அரசு தரப்பிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

14. இவ்வழக்கின் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.4 தனது சாட்சியத்தில், தான் அரசு பேருந்தின் நடத்துனராக பணிபுரிந்து வருவதாகவும், அ.சா.1 சம்பவத்தின் போது தான் நடத்துனராக பணிபுரிந்த அரசு பேருந்தின் ஓட்டுநர் என்றும், கடந்த 28.03.2017 அன்று மதியம் 12.00 மணி அளவில் தான் TN 67 N 0409 என்ற எண் கொண்ட அரசு பேருந்தில் நடத்துனராக பணியில் இருந்த போது மேற்படி பேருந்தில் கிருஷ்ணன்கோவில் அடுத்துள்ள VPM கல்லூரி பேருந்து நிறுத்தத்தில் பயணிகளுக்கு பயணச்சீட்டு கொடுத்துக்கொண்டிருந்ததாகவும், அப்போது அந்த பேருந்து, பேருந்து நிறுத்தத்தை தாண்டி வடக்கிலிருந்து தெற்காக வந்து கொண்டிருந்த போது அந்த இடத்தில் ரோடு வேலை நடந்து கொண்டிருந்ததாகவும், திடீரென ஒரு சத்தம் கேட்டதாகவும், பேருந்தில் உள்ள அனைத்து பயணிகளும் நானும் பேருந்திலிருந்து இறங்கி பார்த்த போது ஒரு இருசக்கர வாகனம் தங்களது பேருந்தில் மோதியிருந்ததாகவும், அதில் ஒரு பையனும், அவருடைய அம்மாவும் இருந்ததாகவும், அந்த பையன் யார் என்று தனக்கு தெரியாது என்றும், இவ்வழக்கின் எதிரி அந்த பையன் இல்லை என்றும், பேருந்திற்கு விபத்து ஏற்பட்டதால் தான் பேருந்தில் இருந்த பயணிகளை மற்றொரு பேருந்துக்கு மாற்றி அனுப்பி வைத்ததாகவும், அ.சா.1 மேற்படி சம்பவம் பற்றி திருவில்லிபுத்தூர் பேருந்து பணிமனை நிர்வாகத்திற்கு தகவல் தெரிவித்ததாகவும், அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசு தரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போதும் அரசு தரப்பிற்கு ஆதரவாக எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை.

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

15. இவ்வழக்கில் மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைப் படுத்தப்பட்ட அசா.5 தனது சாட்சியத்தில், அ.சா.1 யை தனக்கு தெரியாத என்றும், கடந்த 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதிய நேரத்தில், ஒரு இடத்தில் உள்ள தார் ரோட்டில் ரோடு வேலை பார்த்துக் கொண்டிருந்த போது அந்த இடத்திலிருந்து 100 மீட்டர் தள்ளி விபத்து நடந்ததாக கேள்விப்பட்டதாகவும், எந்த விபத்து என்று தனக்கு தெரியாது என்றும், மறுநாள் போலீசார் தன்னை விசாரித்ததாகவும் அரசு தரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போதும் அரசு தரப்பிற்கு ஆதரவாக எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை.

16. அ.சா.6 தனது சாட்சியத்தில், அ.சா.1 யை தனக்கு தெரியாது என்றும், அ.சா.5 ம் தானும் ஒன்றாக வேலை செய்து வருவதாகவும், கடந்த 7 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் நேரத்தில் கிருஷ்ணன்கோவில் அடுத்துள்ள சூட்டிங் ரேஞ்சருக்கு அருகே உள்ள ரோட்டில் வேலை பார்த்துக் கொண்டிருந்த போது அந்த இடத்திலிருந்து 150 மீட்டர் தள்ளி விபத்து நடந்ததாக கேள்விப்பட்டதாகவும், என்ன விபத்து என்று தனக்கு தெரியாது என்றும், மறுநாள் போலீசார் தன்னை விசாரித்ததாகவும் அரசு தரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போதும் அரசு தரப்பிற்கு ஆதரவாக எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை.

17. பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.7 மற்றும் அசா.8 ஆகியோர் தங்களது சாட்சியத்தில், பார்வை மகஜரில் உள்ள கையெழுத்துக்கள் தங்களுடையது தான் என்றும், ஒரு நாள் தங்களது கம்பெனியில் பணியிலிருந்த போது போலீசார் வந்து தங்களிடம் கையெழுத்து கேட்டதாகவும், தாங்களும் போட்டுக்கொடுத்ததாகவும் எதற்காக போட்டு கொடுத்தார்கள் என்று தங்களுக்கு தெரியாது என்றும், போலீசார் தங்களை விசாரிக்கவில்லை என்று அரசு தரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும் அவர்களை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்த

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

போதும் அரசு தரப்பிற்கு ஆதரவாக எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை.

18. அ.சா.9 தனது சாட்சியத்தில், தான் டிரைவராக வேலை செய்து வருவதாகவும், கடந்த 2017 ம் வருடம் பங்குனி மாதம் ஒரு நாள் தனது பெரியம்மாவான கூடமாலுக்கு அடிபட்டிருப்பதாகவும், திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் சேர்த்திருப்பதாகவும், தங்கள் ஊரில் தன்னிடம் தெரிவித்ததாகவும், அதன் பின்பு என்ன நடந்தது என்று தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று அரசுதரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார்.

19. அ.சா.10 தனது சாட்சியத்தில், கடந்த 2017 ம் வருடம் ஏப்ரல் மாதம் 1 நாள் கூடமாலுக்கு விபத்து ஏற்பட்டு மருததுவமனையில் அனுமதித்து இருப்பதாக தகவல் தெரிந்து மருத்துவமனைக்கு சென்று தான் பார்த்ததாகவும், அது தவிர வேறு எதுவும் தனக்கு தெரியாதுஎ ன்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் அரசுதரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார்.

20. அ.சா.11 தனது சாட்சியத்தில், கடந்த 28.03.2017 ம் தேதி திருவில்லிபுத்தூர் அரசு போக்குவரத்து கழகத்தில் தான் மேற்பார்வையாளராக பணிபுரிந்ததாகவும், TN 67 N409 என்ற அரசு பேருந்துக்கு ஓட்டுநராக அ.சா.1 யையும், நடத்துனராக அ.சா.4 யையும் நியமனம் செய்ததாகவும், அதற்கான சான்று வழங்கியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

21. இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அசா.12 தனது சாட்சியத்தில், கடந்த 28.03.2017 அன்று திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்தில், பணியிலிருந்த போது, 12.15 மணி அளவில் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலை பெற்று வாகன விபத்தில்

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

காயமடைந்த கூடம்மாள் என்பவரை விசாரிக்க சென்ற போது அவர் பேச முடியாத நிலையில் இருந்ததால், அவரை மேல் சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக கிடைத்த தகவலை பெற்று நிலையம் வந்து பொதுநாட் குறிப்பேட்டில் பதிவு செய்ததாகவும், அதிகாரிகளிடம் தகவல் சொன்னதாகவும், கடந்த 29.03.2017 அன்று 11.00 மணி அளவில் திருவில்லிபுத்தூர் அரசு பேருந்து ஓட்டுநராக பணிபுரியும் அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த மனுவை பெற்று நிலைய குற்ற எண்.232/2017 பிரிவுகள் 279, 337, இதசவாக வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், வழக்கு கோப்பை சார்பு ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

22. அ.சா.13 தனது சாட்சியத்தில், கடந்த 29.03.2017 அன்று அ.சா.12 பதிவு செய்து வைத்திருந்த வழக்கு கோப்பை அன்றைய தினம் தனது பார்வைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்ததாகவும், பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இவ்வழக்கில் காயம்பட்ட கூடம்மாள் என்பவர் 30.03.2017 அன்று இறந்துவிட்டதால், இவ்வழக்கின் சட்டப்பிரிவை 279, 304(A) இதசவாக மாற்றம் செய்து இவ்வழக்கினை மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்ததாகவும், கூறியுள்ளார்.

23. மேலும் அவரது குறுக்கு விசாரணையில், மேற்படி வரைபடத்தில், பவளம் பேக்கரி என்ற இடம் குறிப்பிடப்படவில்லை என்றும், முதல் தகவல் அறிக்கையில் குற்றம் நிகழ்ந்த இடம் என்று திருவில்லிபுத்தூர் டூ மதுரை ரோட்டில் உள்ள சூட்டிங் பாலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், அ.சா.1 கொடுத்த புகார் மனுவில் மேற்படி இடமானது குறிப்பிடப்படவில்லை என்றும், புகார் மனுவில் எதிரியின் ஊர் நத்தம்பட்டி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், அயன்

நத்தம்பட்டி என்று குறிப்பிடவில்லை என்றும், முதல் தகவல் அறிக்கையில் எதிரியின் விலாசத்தில், அயன்நத்தம்பட்டி என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், மேற்படி விபத்து நடந்த தேதியில் அரசு பேருந்தில் பயணம் செய்த யாரையும் தான் விசாரனை செய்யவில்லை என்றும், இவ்வழக்கின் புகார் மனுவில் தேதியானது 28.03.2017 என்றிலிருந்து 29.03.2017 என்று திருத்தப்பட்டுள்ளதாகவும் சாட்சியம் அளிததுள்ளார்.

24. மருத்துவரான அசா.14 தனது சாட்சியத்தில், கடந்த 28.03.2017 அன்று அய்யன்நத்தம்பட்டியை சேர்ந்த கூடம்மாள் என்பவரை பாலு என்பவர் அழைத்து வந்ததாகவும், அவரை பரிசோதித்த போது அவரின் மகனின் வாக்குமூலத்தினபடி 28.03.2017 அன்று மதியம் 12.00 மணி அளவில் திருவில்லிபுத்தூர் சூட்டிங் ரேஞ் அருகில் இருசக்கர வாகனத்தில் நத்தம்பட்டியிலிருந்து திருவில்லிபுத்தூர் நோக்கிவரும் போது அதே திசையில் வந்த பிஆர்சி பஸ் மோதியதாக கூறியதாகவும், மேற்படி கூடம்மாளை பரிசோதித்த போது அவர் சுயநினைவுடன் இருந்ததாகவும், அருக்கு வலது பக்க தலையில் வெட்க்காயமும், Parietal ஏறியாவில் எலும்பு முறிவும் ஏற்பட்டிருந்ததாகவும், வலது பக்கம் முகம் வீக்கத்துடன் காணப்பட்டதாகவும், வலது பக்க கை முட்டியில் பலதரப்பட்ட சிராய்ப்பு காயம் இருந்ததாகவும், அவரை பரிசோதித்த போது அவருக்கு அதிகமாக பிரசர் இருந்ததால், முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், போலீசார் தன்னை விசாரித்ததாகவும் கூறியுள்ளார்.

25. மேலும் தனது குறுக்கு விசாரணையில், மேற்படி விபத்து பதிவேட்டில் பி.ஆர்.சிபஸ் கிராசாக வந்து தன் வண்டியில் மோதியதாக எதிரி பாலு தன்னிடம் கூறிய சங்கதிகளை அன்றைய தினமே போலீசார் விசாரணையில் கூறியதாகவும், மேற்படி பாலு என்பவருக்கு எந்தவித காயமும் இல்லை என்றும், அவர் சுயநினைவுடன் இருந்ததாகவும் கூறியுள்ளார்.

SUBASHINI T

Digitally signed by SUBASHINI T

26. அ.சா.15 தனது சாட்சியத்தில், கடந்த 30.03.2017 அன்று திருவில்லிபுத்தூர் நகர் வட்ட காவல் ஆய்வாளராக பணியிலிருந்த போது மேற்படி காவல் நிலைய குற்ற எண்.232/2017 பிரிவுகள் 279, 337 இதசவாக பதிவு செய்திருந்த முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த பாதிக்கப்பட்ட நபர் இறந்துவிட்டதால், இவ்வழக்கை தனது மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு சென்று இறந்தவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணையை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் மேற்கொண்டுள்ளதாகவும், இறந்தவரின் உடலை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்ததாகவும், ஏற்கனவே இவ்வழக்கின் 2 முதல் 9 சாட்சிகளை அ.சா.13 விசாரித்துள்ளார் என்றும், அவர்களை தானும் விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அ.சா.11, அ.சா.12 மற்றும் தலைமைக் காவலர் ராஜேஸ்கண்ணா ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 18.04.2017 அன்று விபத்துக்குள்ளான வாகனங்களை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பியதாகவும், 06.05.2017 அன்று திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் சுகன்யாதேவி மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை மருத்துவர் ஜமால் முகமது சாஜி மற்றும் மதுரை ராஜாஜி மருத்துவமனை மருத்துவர் காதர் மைதீன், மதுரை மருத்துவ கல்லூரி மருத்துவர் விஜயபாலாஜி ஆகியோர்களை விசாரித்து மருத்துவ சான்று மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அன்றைய தினமே மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்று அன்றைய தினமே இவ்வழக்கில் முதல் விசாரணை மேற்கொண்ட அ.சா.13 யை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அன்றே தனது விசாரணையை முடித்து எதிரி மீது பிரிவு 279, 304(A) இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

27. மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்ததிலிருந்து, இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது முதல்

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

விசாரணையில், 29.03.2017 அன்று இவ்வழக்கு சம்பவம் சம்பந்தமாக புகார் கொடுத்ததாக கூறியுள்ளார். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.13 தனது குறுக்கு விசாரணையில், இவ்வழக்கின் புகார் மனுவில் தேதியானது 28.03.2017 என்றிலிருந்து 29.03.2017 என்று திருத்தப்பட்டுள்ளதாக ஒப்புக்கொண்டுள்ளார். இவ்வழக்கின் புகார்தாரரை தவிர இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.2 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும் இவ்வழக்கின் பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.7 மற்றும் அ.சா.8 ஆகிய சாட்சிகளும் அரசு தரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சியம் அளித்துள்ளனர். இவ்வழக்கு பற்றி கேள்விபட்டு தெரிந்து கொண்டதாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.9 மற்றும் அ.சா.10 ஆகிய சாட்சிகளும் அரசு தரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சியம் அளித்துள்ளனர். இவ்வழக்கில் இறந்த நபருக்கு சிகிச்சை அளித்த அ.சா.14 தனது சாட்சியத்தில், மேற்படி இவ்வழக்கில் இறந்த நபரை தன்னிடம் சிகிச்சைக்கு அழைத்து வந்த போது, எதிரே வந்த பி.ஆர்.சி பஸ் குறுக்காக வந்து தனது வண்டியில் மோதியதாக இவ்வழக்கின் எதிரி தன்னிடம் கூறியதாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் அ.சா.1ன் சாட்சியத்தை உறுதிபடுத்தும் வகையில் மற்ற சாட்சிகளின் சாட்சியங்கள் அமையவில்லை. எனவே மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரி தான் அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும், சாலைவிதிகளை பின்பற்றமலும், ஹாரன் அடிக்காமலும் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து இவ்வழக்கில் இறந்த கூடம்மாள் என்பருக்கு இறப்பு ஏற்படுத்தினார் என்பதை தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே சந்தேகத்தின்பலனை எதிரிக்கு அளித்து எதிரியை இவ்வழக்கிலிந்து விடுதலை செய்வதே நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

30. முடிவாக இந்த வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவம் குறித்து

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணம் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கத் தவறி விட்டதாக தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி, எதிரி மீது சுமத்தப்பட்ட இதச சட்டப்பிரிவுகள் 279, 304(A)-ன் படியான குற்றத்திற்கு குற்றவாளி இல்லை என முடிவு செய்து குவிமுச பிரிவு 255(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

31. மேலும் இந்த வழக்கில் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படாததால் சொத்து குறித்து உத்தரவு இல்லை. எதிரி எழுதிக் கொடுத்த பிணையமுறி மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் இரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2026-ஆம் ஆண்டு ஜீன் மாதம் 24-ஆம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.கொத்தாளமுத்து |
| அ.சா.2 | திரு.சிவனேஷ்வரன் |
| அ.சா.3 | திரு.சண்முகசுந்தரம் |
| அ.சா.4 | திரு.பாண்டியன் |
| அ.சா.5 | திரு.முனியாண்டி |
| அ.சா.6 | திரு.அய்யனார் |
| அ.சா.7 | திரு.பார்த்திபன் |
| அ.சா.8 | திரு.பெருமாள் |
| அ.சா.9 | திரு.செந்தில்குமார் |
| அ.சா.10 | திரு.கணேசன் |
| அ.சா.11 | திரு.சத்தியமூர்த்தி |

SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

அ.சா.12 திரு.தேவதாஸ்

அ.சா.13 திரு.ரமேஷ்

அ.சா.14 திருமதி.சுகன்யாதேவி

அ.சா.15 திரு.மகேஸ்குமார்

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | – | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | – | பார்வை மகஜரில் உள்ள அ.சா.7 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.3 | – | பார்வை மகஜரில் உள்ள அ.சா.8 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.4 | – | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | – | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | – | விபத்து பதிவேடு, |
| அ.சா.ஆ.7 | – | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.8 | – | பிரேத பரிசோதனை அறிக்கை |
| அ.சா.ஆ.9 | – | TN 67 N 0409 என்ற வானத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.10 | – | TN 67 AQ 4847 என்ற வானத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.11 | – | பணி நியமனச் சான்று |
| அ.சா.ஆ.12 | – | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.13 | – | சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை |

**<u>அரசு தரப்பு சான்றுப் பொருள்</u>** - இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** - இல்லை

SUBASHINI T

Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

| | |
|---|---|
| 1. | எந்த சாட்சியும் 3 முறைக்கு மேல் நிறுத்தப்படவில்லை. |
| 2. | வழக்கின் முடிவு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 3. | நடுவர் தீர்ப்புரையின் அனைத்து பக்கங்களிலும் கையொப்பமிட்டுள்ளார். |
| 4. | இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் தாக்கல் செய்யப்படவில்லை. |
| 5. | வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார். |